வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  17.04.2025 வியாழக்கிழமை  இதழ் : 107  பக்கங்கள் : 12

## ஜே.வி.பி. வெற்றி பெற்றால் மன்னார் பறிபோய்விடும்!

### எச்சரிக்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார், ஏப்ரல் 17

**உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக்கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே, உள்ளூராட்சி மன்றங்களை ஜே. வி. பி. அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும். மன்னாரில் நகர சபை, பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன என ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டு



இருக்கின்ற நிலையில் வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தை நாடி தற்போது வெற்றி பெற்றுள்ளோம்.

இந்த நிலையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல சபைகளைக் கைப்பற்றும்

11

## வெப்ப நிலை இன்று எச்சரிக்கை மட்டத்தில்!

கொழும்பு, ஏப். 17

மனித உடலால் உணரக் கூடிய வெப்பநிலை இன்று எச்சரிக்கை மட்டத்திற்கு உயரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இரத்தின புரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகரிக்கக் கூடும்.

கண்டி, கேகாலை, மாத்தளை, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வெப்பநிலை அதிகரிக்கக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

(அ)

## வரி குறித்து பேச்சு நடத்துவதற்கு அமெ. செல்லும் இலங்கைக் குழு!

கொழும்பு, ஏப். 17

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் விதித்த சுங்க வரி தொடர்பில் இலங்கை பேச்சு நடத்த உள்ளது.

இந்த வரி தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்கா விஜயம் செய்ய உள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்தப் பிரதிநிதிகள் குழு அமெரிக்கா விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இந்த தகவல்களை உறுதி செய்துள்ளது.

11

## பாவற்குள கரையிலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

வவுனியா, ஏப். 17

வவுனியா பாவற்குளத்தின் அலைகரைப்பகுதியில் இருந்து இரத்தக் கறைகளுடன் இளைஞரின் சடலம் ஒன்றை உலுக்குளம் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள குளத்தின் அலைகரைப் பகுதியில் சடலம் ஒன்று உள்ளமை தொடர்பாக உலுக்குளம் பொலிஸாருக்கு பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் வவுனியா

11

## முள்ளிவாய்க்காலில் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஒருபோதும் மறக்கப் போவதில்லை!

### பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன்

லண்டன், ஏப். 17

முள்ளிவாய்க்காலில் தமிழ் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஒருபோதும் மறக்கப் போவதில்லை என புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் தமிழ் புதுவருடத்தைக் கொண்டாடும் இந்த தருணத்தில் பிரித்தானியாவிலும் உலகெங்கிலும் உள்ள

11

## புராதன ஆலயங்களை விடுவிக்க வேண்டும்!

### இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி கீரிமலை சடையம்மா மடம் ஆதிச்சிவன் கோவிலிருந்த நிலம், காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல் பாவனையிலுள்ள சுக்கிரவார சத்திர மடத்து நிலம் என்பவற்றை உடனடியாக

11

## தற்காலிகப் பின்னடைவுகளுக்காக நிரந்தர வெற்றியை இழக்கமுடியாது

### சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஏப். 17

தற்காலிகப் பின்னடைவுகளுக்காக நாம் நிரந்தர வெற்றியை இழக்க முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள்

11

## பிள்ளையான் ஒரு தேசிய வீரர் அவர் கண்ணீர் விட்டு அழுதார்

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 17

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் ஒரு தேசிய வீரர் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

11

## தேர்தல் திகதியில் மாற்றம் கிடையாது

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு எதிர்வரும் வாரம் திட்டமிட்ட வகையில் நடத்தப்படும். தேர்தல் திகதியில் எவ்வித மாற்றமும் கிடையாது என தேர்தல்கள்

11

## குற்றப் புலனாய்வு விசாரணை விவரத்தை காசுக்கு விற்கும் பிரதி பொலிஸ்மா அதிபர்



கொழும்பு, ஏப். 17

தெரிவு செய்யப்பட்ட சமூக வலைத்தள ஊடகவியலாளர்களுக்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் தொடர்பான விவரங்களை பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் பணத்துக்கு விற்பனை செய்வதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்விடயம் குறித்து உடன் விசாரணைகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும்

11

## யாரை தெரிவு செய்வது எனக் கூறும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது

### பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 17

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்தால் உள்ளூராட்சி மன்ற அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது முறையற்றதொரு கருத்தாகும். யாரை தெரிவு செய்யவேண்டும் என்று மக்களுக்கு குறிப்பிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது என பொதுஜன

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய விளையாட்டுகளை நினைவூட்டி அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நிகழ்வு இது

## வடக்கு புத்தாண்டு நிகழ்வு குறித்து ஆளுநர்



யாழ்ப்பாணம், ஏப். 17

போர்த் தேங்காய், கிட்டிப் புள்ளு போன்ற விளையாட்டுக்கள் இன்றைய சிறுவர்களுக்குத் தெரியுமோ தெரியவில்லை. அப்படி மறந்துபோகின்ற எங்கள் பாரம்பரிய விளையாட்டுகளை நினைவூட்டி அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையில் இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்தமைக்காக பாராட்டுகின்றேன் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் விளையாட்டுத் திணைக்களம், சுற்றுலாப் பணியகம் மற்றும் வலி. தெற்கு பிரதேச சபை இணைந்து நடத்திய வடக்கு மாகாண சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம் - 2025 நிகழ்வு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம. பற்றிக் டிறஞ்சன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில்,

காலத்துடன் இணைந்து பல மாற்றங்களை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். பல விளையாட்டு நிகழ்வுகள் அருகிச் செல்கின்றன. பல விளையாட்டுகளை மறந்தே போய்விட்டோம். நடைபெறுகின்ற விளையாட்டு நிகழ்வுகளில்கூட இளையோர் பங்கேற்பும் மிகக் குறைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதன் பின்னர் தனியார் கல்வி நிறுவனம் என்று தமது நாளைச் செலவிடுகின்றனர். இல்லையேல் வீட்டில் இருந்து அலைபேசியை பயன்படுத்துகின்றனர். இப்படியிருந்தால் அவர்களால் எப்படி விளையாட்டில் ஈடுபட முடியும்?

உண்மையில் மிகச் சிறப்பான நிகழ்வை வடக்கு மாகாண கல்வி அமைச்சும், பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஏற்பாடு செய்திருக்கின்றன. தமிழ் - சிங்கள மாணவர்கள், கலைஞர்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தியிருக்கின்றார்கள். மறந்துபோகின்ற எங்கள் பாராம்பரியங்களை நினைவூட்டும் வகையில் இந்தக் கொண்டாட்டத்தை ஒழுங்குபடுத்தியிருப்பது மகிழ்வை தருகின்றது.

எப்போதும் புத்தாண்டு பிறக்கும்போது நாம் சிறப்பாக அந்த ஆண்டு அமையவேண்டும் என்பதற்காக ஆலயங்களில் வழிபாடு செய்வோம். பிறந்திருக்கின்ற சித்திரை புத்தாண்டு எமது மாகாணத்தில் அபிவிருத்திகள் நடந்தேறி மக்கள் சந்தோசமாக வாழ்வதற்கு வழிசெய்யவேண்டும். கனவுகளை நிறைவேற்றுகின்ற ஆண்டாக இது அமைய வேண்டும் - என்றார்.

சித்திரை புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்ற ஆளுநர் இன்னிய வாத்திய இசையுடன் அழைத்து செல்லப்பட்டார். அத்துடன் தமிழ்ப் பாரம்பரியத்துடனான குடில் மற்றும் சிங்கள பாராம்பரிய குடில்கள் என்பன மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றையும் ஆளுநர் பார்வையிட்டார். தொடர்ந்து மைதானத்தில் தமிழ் சிங்கள பாரம்பரிய கலாசார நடன நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றை ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் தமிழ்ப் பாரம்பரிய குடிலின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த "குந்தில்" இருந்து பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து வேடப் போட்டியையும் பார்வையிட்டு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளையும் ஆளுநர் ஆரம்பித்து வைத்தார். (அ-02)

# சிறுவரை முறைக்கேடாக பயன்படுத்திய நபரை கட்சியிலிருந்து நீக்கிய தமிழ் அரசு

யாழ்ப்பாணம், ஏப். 17

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து கிளிநொச்சி விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரான அலன்ரின் என்பவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் 16 சிறார்களை முறைக்கேடாக நடத்திய குற்றச்சாட்டில் விளையாட்டு பயிற்றுவிப்பாளரான அவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் அங்கத்தவரான அலன்ரினை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் 270 மில்லியன் ரூபாய் வருமானம்

கொழும்பு, ஏப். 17

கடந்த 6 நாட்களில், அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம், 270 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று, அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகளிடம் இருந்து 48 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுடதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# புலிகளின் தியாகங்களை வைத்து போலி அரசியல்!

## கூறுகிறது ஈ. பி. டி. பி.

யாழ்ப்பாணம், ஏப். 17

புலிகள் அமைப்பின் தியாகங்களை வைத்து போலி அரசியல் முன்னெடுக்கப்படுவதாகவும் இதனை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக செயலாளர் பன்னீர் செல்வம் சிறீகாந் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வழக்கமாக தேர்தல் காலங்களில் எமது கட்சிக்கு எதிராக சேறடிப்பதையும், புலிகளின் தலைமைக்கும் எமது செயலாளர் நாயகத்துக்கும் இடையிலான முரண்பாடுகளை வைரலாக்குவதும் எமது அரசியல் எதிர் தரப்புகள் கையாள்வது வழக்கம்.

அவ்வாறு தற்போதும், சில காணொலிகள் சமூக ஊடகங்களில் வைரலாக்கப்பட்டு வருகின்றன. இவை தொடர்பாக எமது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

புலிகளின் தலைமையும் எமது செயலாளர் நாயகமும், எமது மக்களின சுதந்திரமான - கௌரவமான வாழ்வை உறுதிப்படுத்துவதற்காக இரு வேறு ஆயுதப் போராட்ட அமைப்புக்களை வழிநடத்தியவர்கள். எங்களுடைய கைகளிலே ஐந்து விரல்கள் காணப்படுகின்றபோதிலும் அவை வித்தியாசமான செயற்பாடுகளை கொண்டவையாக காணப்படுகின்றன.

அந்தவகையில் எமது செயலாளர் நாயகத்துக்கும் புலிகளின் தலைமைக்கும் இடையில் தமது இலக்கை அடைவது தொடர்பில் வித்தியாசமான சிந்தனைகள், இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் காணப்பட்டன. எத்தகைய அழிவுகளை கொடுத்தேனும் இலக்கை அடையும் வரையில் ஆயுதப் போராட்டத்தை வீரியமாக முன்னெடுக்க வேண்டும் என்பது புலிகளின் தலைமையின் சிந்தனை.

விவேகம் அற்ற வீரம் விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், சர்வதேச பூகோள நிலவரங்களை அனுசரிக்க வேண்டும், இருப்பதை பாதுகாத்து முன்னோக்கி நகர வேண்டும், சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும், உருவாகும் சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும் என்பது எமது செயலாளர் நாயகத்தின் சிந்தனை ஆனால், இருவருக்கும் இடையில் பொதுவான குணாம்சங்களும் காணப்பட்டன.

எமது மக்களுக்காக உருவாகிய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தையும் களத்தில் இருந்து அகற்றி தமிழ் மக்களுக்கான பேரம் பேசும் பலத்தை பலவந்தமாக தமது கையில் எடுத்த புலிகளின் தலைமை, அதனை சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்ற ஆதங்கம் எமது செயலாளர் நாயகத்தின் மனதில் ஆழமாக பதிந்து இருக்கின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் எமது மக்கள் சந்தித்த அனைத்து இழப்புகளுக்கும் புலிகளின் தலைமையின் தவறான அணுகுமுறைகளே காரணம் என்பது எமது செயலாளர் நாயகத்தின் திடமான வாதமாக இருக்கிறது.

எனவே, எமது செயலாளர் நாயகத்தின் அறச் சீற்றமும், அரசியலுக்காக எதையும் மூடி மறைக்காமல் வெளிப்படுத்தும் வரலாற்று உண்மைகளுமே எமது அரசியல் எதிரிகளால் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி எடுக்கப்பட்டு எமக்கு எதிரான பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதே உண்மை - என்றார். (அ)

# ரூபாயின் பெறுமதி உயர்வு

கொழும்பு, ஏப். 17

கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது, நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி சற்று அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 293 ரூபாய் 91 சதம், விற்பனைப் பெறுமதி 302 ரூபாய் 61 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 388 ரூபாய் 14 சதம், விற்பனைப் பெறுமதி 402 ரூபாய் 64 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 331 ரூபாய் 33 சதம், விற்பனைப் பெறுமதி 344 ரூபாய் 64 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 356 ரூபாய் 52 சதம், விற்பனைப் பெறுமதி 373 ரூபாய் 20 சதம்.

கனடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 209 ரூபா 42சதம், விற்பனைப் பெறுமதி 218 ரூபாய் 33 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 184 ரூபாய் 57 சதம், விற்பனைப் பெறுமதி 194 ரூபாய் 9 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 5 சதம், விற்பனை பெறுமதி 2 ரூபாய் 13 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பன்னாட்டு கம்பனிகளின் விருப்புக்காக இந்த அரசும் செயல்படுவது வேதனை!

## மன்னார் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டு

மன்னார், ஏப். 17

மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மற்றும் கனிம மண் அகழ்வு திட்டங்களை நிறுத்துமாறு கோரி பல வருடங்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக இந்தத் திட்டங்களை நிறுத்துவதாக ஜே.வி.பியின் சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக எம்மைச் சந்தித்து வாக்குறுதி அளித்திருந்தன.

ஆனால், இதுவரை நிறைவேற்றப்படவில்லை. காற்றாலை திட்டம் டைட்டானியம் அகழ்வு கரையோர கனிம மணல் அகழ்வு, இம் மூன்று திட்டங்களாலும் மன்னார் தீவுப் பகுதி பல்வேறு விதமான சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் என பல துறை சார்ந்த வல்லுநர்கள் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் வேளையில் அரசு அதனைப் பொருட்படுத்தாமல் செயல்படுத்த முனைகிறது.

மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்துக்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம். கடந்த காலத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மீது அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் என்றும் இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் பல்வேறு விதமான விமர்சனங்களை தெரிவித்து வந்த ஜனாதிபதி, அதே வேலையை அவரும் முன்னெடுப்பது வெட்கக்கேடான அரசியல் செயல்பாடு ஆகும்.

நடைமுறைச் சாத்தியமற்ற போலியான வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றி பெற்று அதனை நடைமுறைப் படுத்த முடியாமல் திண்டாடுகின்றாடுகின்றது அரசு. ஆகவே, மூன்றாவது தேர்தலிலும் போலியான வாக்குறுதியை வழங்கி வெற்றி பெற முனைகிறீர்களா? நாளை மன்னாருக்கு வருகை தர உள்ள தாங்கள் இம் மூன்று திட்டங்களையும் நிறுத்துவதாக அறிவிக்கவேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
17.04.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்காவை திருப்திப்படுத்த முடியுமா?

ட்ரம்ப் நிர்வாகத்தின் வரிக் கொள்கையைத் தொடர்ந்து பல நாடுகள் சமரச பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றன. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிகவும் தெளிவான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். அதாவது, இணக்கப்பாட்டுக்கு வருபவர்கள் தொடர்பில் பரசீலிக்கலாம். ஆனால் எவரேனும் எதிர்ப்பு வெளியிட்டால் அவர்கள் மீதான வரியை இரட்டிப்பாக்குவோம். அந்த அடிப்படையில்தான் எதிர்ப்பு வெளியிட்ட சீனாமீதான வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அமெரிக்க நிர்வாகத்துடன் பேசுவதற்காக ஒரு நிபுணர் குழுவை அனுப்பவுள்ளார். அமெரிக்க வரி விதிப்பானது இலங்கையை பெருமளவு பாதிக்கவுள்ளது. ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வேலைகளை இழக்கவுள்ளனர். இந்தப் பின்புலத்தில்தான், ஜனாதிபதி அநுர குமார அமெரிக்க வரிவிதிப்பை கொரோனோ காலத்தோடு ஒப்பிட்டிருக்கிறார். இந்த விடயத்தை சாதுர்யமாக கையாளாது விட்டால் இலங்கையின் பொருளாதார நிலைமை மேலும் பாதிக்கப்படும் என்று பலரும் எச்சரிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க தனது அறிக்கையில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கவுள்ளதாக குறிப்பிட்டிருக்கிறார்.

ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தை அநுரகுமார அரசாங்கத்தால் சமாளிக்க முடியுமா? அதற்கான ஆற்றல் அநுரவிடம் இருக்கிறதா? ட்ரம்ப் நிர்வாகத்தின் வரி விதிப்பை மேலோட்டமாக பார்த்தால் நாடுகள்மீதான வரி அதிகரிப்பால் வருமானத்தை அதிகரிக்க முற்படும் ஒரு முயற்சி என்றே தெரியக்கூடும். ஆனால், அதன் உண்மையான நோக்கம் வேறு. அடிப்படையில் இது ஒரு வர்த்தக யுத்தம். இந்த யுத்தத்தின் இலக்கு மிகவும் தெளிவான நோக்கில், சீனாவின் பொருளாதார எழுச்சியையும் அதனுடன் ஒட்டியதாக இராணுவ விரிவாக்கத்தையும் முடக்குவதாகும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம், சீனா மீதான அறிவிக்கப்படாத வர்த்தக யுத்தமொன்றை அறிவித்திருக்கிறது. அதற்கான ஒரு கருவிதான் இரட்டிப்பு வரி விதிப்பாகும். ஆனால், அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமோ சீனாவுடன் நெருங்கிச் செயல்படுவதற்கான விருப்பைக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுடன் இருக்கிறது.

காலாவதியாகிப் போன அணிசாரா கொள்கையை உயர்த்திப் பிடிக்க முற்படுகின்றது. இந்த நிலையில் அநுர அரசாங்கம் தொடர்பில் ட்ரம்ப் நிர்வாகம் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருக்கும் என்பதே முக்கியமானது. ஏனெனில், ட்ரம்ப் நிர்வாகம் ஒரு விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு நகர்வும் அமெரிக்காவுக்கு எவ்வாறான நன்மையை கொண்டுவருகின்றது? அந்த அடிப்படையில்தான் விடயங்களை கையாள முடியும். இதன் காரணமாகவே வெளிநாடுகளுக்கான அமெரிக்க உதவித் திட்டங்களையும் ட்ரம்ப் நிர்வாகம் நிறுத்தி வைத்திருக்கிறது.

இந்த நிலையில் அமெரிக்காவின் உலகளாவிய எதிர்பார்ப்புகளை அநுர அரசாங்கத்தால் நிவர்த்தி செய்ய முடியுமா? ஒருவேளை இலங்கைக்கு சில சலுகைகளை வழங்கும் தீர்மானத்தை அமெரிக்கா மேற்கொண்டால், அதற்கான பிரதியுபகாரமாக எதனை எதிர்பார்க்கும்?

இவ்வுலகில் எவையும் இலவசமல்ல - இந்த அடிப்படையில்தான் உலகின் பலம்பொருந்திய நாடுகளின் ஒவ்வொரு நகர்வும் அமையும். இந்த விடயங்களை விளங்கிக்கொண்டு, அமெரிக்க நலன்களுக்கு ஏற்றவாறு விட்டுக் கொடுப்புகளை செய்தால், அநுர எதிர்பார்க்கும் சலுகைகளை அமெரிக்கா வழங்கக்கூடும். அதிகாரத்தில் இல்லாதபோது பேசப்படும் இலட்சிய வாதங்கள் அனைத்துமே வெறும் சொல்ஜாலங்களே அன்றி, அவற்றுக்கும் நடைமுறை உலகுக்கும் எவ்வித பெறுமதியும் இருப்பதில்லை - இருக்கவும் முடியாது என்பற்கான ஒரு நடைமுறை உதாரணம்தான் ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

நாட்டில் தொடர்ந்தும் ஆட்சியாளராக இருக்க வேண்டும் என்றால் உலகோடு ஒத்துப் போய்த்தான் ஆகவேண்டும். இதில் மாற்றுத் தெரிவு என்று ஒன்றில்லை. இந்த அடிப்படையான உலக உண்மையை தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கியவர்கள் புரிந்து கொண்டிருந்தால் - அதற்கேற்ப செயல்பட்டிருந்தால், இன்று முற்றிலும் வேறுபட்ட முன்னேற்றகரமான அரசியல் சூழலில் தமிழ் மக்கள் வாழ்ந்திருப்பர். இன்றைய ஜே. வி. பி. இந்த அரசியல் உண்மையை புரிந்து கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

# அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதியை ஆளும் கட்சி உரிமை கோர முடியாது!

## சத்தியலிங்கம் எம். பி. தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறும் அவ்வாறு செய்யாவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியை கையாள்வதில் தடைகள் ஏற்படுமென மிரட்டும் தொனியில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஆளும் கட்சி உரிமை கோர முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

மன்னாரில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்ட சுற்றாடல் அமைச்சர், இந்த வருடம் வரவு - செலவுத் திட்டத்தில் இதுவரை எந்த அரசாங்கங்களும் செய்யாத அளவுக்கு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கியுள்ளோம்.

இந்த நிதியை முறையாக அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்த வேண்டுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த நிதியை செலவளிப்பதில் தடைகள் ஏற்படலாம். ஆகவே, மக்கள் தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இது மிகமோசமான பிரசார யுக்தியாகும். ஒரு நாட்டின் அரசாங்கத்தால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கீடு செய்வது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கடமையாகும். அதனை அவர்கள் தவிர்க்க முடியாது.

வடக்கு மாகாணம் இலங்கையில்தான் அமைந்துள்ளது. வடக்கு மாகாணம் நான் அறிந்தவரையில் தனிநாடல்ல, அப்படிப் பார்த்தால் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற கொடிய யுத்தத்தால் உட்கட்டுமானங்கள் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளது. இங்குள்ள மக்களின் தேவைகள் நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் தேவைகளைவிட வேறுபட்டவை.

எனவே, வடக்கு மாகாணத்துக்கு விசேடமாக அதிக நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்த நிலையில் உங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளோம். அதனை முறையாக பயன்படுத்த எங்களுக்கு மட்டுமே நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கூறுவதன் அர்த்தம் நீங்கள் வேறு யாருக்காவது வாக்களித்தால் அந்த நிதியை நாங்கள் விடுவிக்கமாட்டோம் என்றே அர்த்தப்படவேண்டியுள்ளது.

மத்திய அரசால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியானது இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் சொந்தமானது. அதனை அனுபவிக்க அனைத்து மக்களுக்கும் உரிமையுள்ளது. அதுவே ஜனநாயகம். வரவு- செலவுத் திட்ட நிதி என்பது தேசிய மக்கள் சக்தியின் கட்சி நிதியோ ஜனாதிபதியின் சொந்த நிதியோ அல்ல. இந்த நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்து பெறப்படுகின்ற நிதியாகும்.

எனவே, இவ்வாறான மிரட்டும் தொனியிலான பாணியில் தேர்தல் பிரசாரம் செய்வதை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அமைச்சரின் மிரட்டலுக்கு சரியான பதிலை எதிர்வரும் தேர்தலில் வாக்குப் பலத்தால் தமிழ் மக்கள் காட்டுவார்கள் என குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-10)

# மன்னாரில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார அலுவலகம் திறக்கப்பட்டது

மன்னார், ஏப். 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் திறப்பு நிகழ்வு மற்றும் பிரசார நடவடிக்கை நேற்று முன்தினம் மாலை மன்னார் - எமில்நகர் மற்றும் பனங்கட்டு கொட்டு பகுதிகளில் நடைபெற்றன.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் நகர சபை வேட்பாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் பொது மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனிடம் கையளித்திருந்தனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேடம்
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். சக ஊழியர்களால்உங்கள்பெயர்கெடாமல்பார்த்துக்கொள்ளுங்கள்.

இடபம்
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். ஆடைஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

மிதுனம்
எதிர்பாராத பணவ்ரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

கடகம்
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். அறிமுகமாவார்கள். கனவு நனவாகும் நாள்.

சிம்மம்
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

கன்னி
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

துலாம்
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும்.

விருச்சிகம்
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும்.வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

தனுசு
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

மகரம்
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

கும்பம்
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

மீனம்
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்வீர்கள். தொழிலில் லாபம் வரும். நன்மைகள் நடக்கும் நாள்.

# தொலைபேசிகளுடன் வீட்டில் மூழ்கிக்கிடக்கும் இளையோர்

## சமூகப்பிறழ்வு அதிகரிக்க காரணம் - ஆளுநர் வேதனை

யாழ்ப்பாணம், ஏப். 17

இன்றைய இளைய சமுதாயத்தின் மத்தியில் சமூகப்பிறழ்வு அதிகரித்துச் செல்கின்றமைக்கு, விளையாட்டுக்களில் பங்கேற்காமையே பிரதான காரணம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இன்றைய பிள்ளைகள் பாடசாலை முடிந்தவுடன் ஒன்றில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். இல்லையேல், தொலைபேசியுடன் வீட்டில் மூழ்கிக் கிடக்கின்றனர். விளையாட்டு மைதானத்தை எட்டிப்பார்ப்பது அருகி வருகின்றது எனவும் ஆளுநர் வேதனை வெளியிட்டார்.

யாழ். வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமும் பொது மக்களும் இணைந்து நடத்திய புதுவருட விளையாட்டு விழா - 2025, இரண்டாம் நாள் நிகழ்வு வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக வடபுல மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



விளையாட்டுக்கழகத் தலைவர் கு.பாலேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார் கலந்துகொண்டார். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு ஆளுநர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

# போராட்டங்களை நசுக்கவே பயங்கரவாத தடைச் சட்டம்!

## அரசுக்கு தேவையாகவுள்ளது என்று சுரேஷ் சாடல்



யாழ்ப்பாணம், ஏப். 17

தமக்கு எதிரான மக்கள் போராட்டங்களை கையாள பயங்கரவாத தடைச் சட்டம் என். பி. பி. எனப்படும் ஜே. வி. பிக்குத் தேவையாக உள்ளது என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என். பி. பி., ஜே.வி.பி. இரண்டும் ஒன்றுதான். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. கொள்கை ஒன்றுதான். சர்வ தேசத்தின் உதவிக்கான வேறு வேறு தோற்றப்பாட்டை காடுகின்றனரே தவிர வேறெந்த விடயமும் இல்லை.

கடற்தொழில் அமைச்சர் இரா. சந்திரசேகர் தமிழ் மக்களை மிரட்ட நினைத்தால் அது அவரது இயலாமையாக இருக்கும். ஏனெனில் தமிழ்த் தரப்பு இவரைப்போல பலரை, பலரது மிரட்டலை கண்டது.

கடந்த தேர்தல் காலத்தில் சொன்னதை செய்வதற்கு அவர்கள் தற்போது தயாராக இல்லை. ஏனெனில் தங்களுக்கு எதிராக வர இருக்கின்ற மக்கள் போராட்டங்களை கையாள பயங்கரவாத தடைச் சட்டம் தேவையாக இருக்கின்றது.

அத்துடன் அபிவிருத்தி பற்றி பேசும் இவர்கள் புதிதாக எந்தவொரு அபிவிருத்தியையும் செய்யவில்லை.

குறிப்பாக பொய் மட்டுமே இவர்களது செயல்பாடாக உள்ளது. சொல்லாடல்கள் வித்தியாசமாக இருக்கின்றதே தவிர உள்ளடக்கங்கள் ஒன்றுதான்.

குறிப்பாக கடந்த அரசுகளின் நிலைப்பாட்டிலேயே இவர்களது பயணமும் தொடர்கின்றது.

பௌத்த விகாரை கட்டுமானங்கள் தொடர்கின்றன. தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களும் தாங்கள் எதை செய்தோம் என்பதை மக்களுக்கு கூறவேண்டும்"- என்றார். (எ)

# நேருக்கு நேர் மோதிய மோ. சைக்கிள்கள் இரண்டு பெண்கள் உட்பட மூவர் காயம்!

வவுனியா, ஏப். 17

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பூந்தோட்டம் பாடசாலை திசையிலிருந்து வவுனியா நகரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிர்த்திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இரண்டு பெண்களும் இளைஞனும் காயமடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ - எ)

# அரச உத்தியோகத்தரை தாக்கிய பொலிஸார் விசாரணைக்கு அழைப்பு

கிளிநொச்சி, ஏப். 17

கிளிநொச்சியில், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றும் சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் ஒருவரை தாக்கிய பொலிஸாரை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் [illegible] பிராந்திய அலுவலகம் விசாரணைக்கு அழைத்துள்ளது.

குறித்த உத்தியோகத்தரை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காரணமின்றித் தாக்கி கைவிலங்கிட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் எதிர்வரும் 21 ஆம் திகதி சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோரை விசாரணைக்கு வருமாறு, மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பானை விடுத்துள்ளதாக பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 மாவட்டங்களில் கடும் வெப்பநிலை!

## மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 17

**நாடளாவிய ரீதியில் 20 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் கடும் வெப்பமான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அதன்படி வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளிலும், இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை "எச்சரிக்கை நிலை" வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வெப்பத்தால் ஏற்படும் பக்கவாதம் போன்ற நோய்களைத் தவிர்க்க பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

நிழலான இடங்களில் அடிக்கடி ஓய்வு எடுப்பதோடு, அதிகளவு நீரைப் பருகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிக வெப்பத்தால் பாதிக்கப்படக்கூடிய வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் கவனமாக இருக்க எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வெளியிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் குழந்தைகள் அல்லது சிறுவர்களை நீண்ட நேரம் தனித்து விட வேண்டாம் என்றும் முடிந்தளவு வெளியில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

வெளியில் செல்லும் போது வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணிந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெப்பநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்களை அறிந்துகொள்ள பொதுமக்கள் வளிமண்டலவியல் திணைக்களத்துடன் இணைந்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# மாலைதீவில் நீரில் மூழ்கி இலங்கை இளைஞர் பலி!

கொழும்பு, ஏப். 17

மாலைதீவில் சாரதியாக பணியாற்றிய இலங்கையர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அவரின் உடலை நேற்று காலை அவரது உறவினர்கள் பெற்றுக்கொண்டனர்.

தொடங்கஸ்லந்த - உடுஹொரம்புவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

15 நாட்களுக்கு முன்பு தனது தங்குமிடத்திலிருந்து 300 மீற்றர் தொலைவில் உள்ள கடல் பகுதிக்கு குறித்த இளைஞன் சென்ற நிலையில் இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளார்.

2 நாட்களுக்குப் பிறகு, கடலில் அவரது உடல் மிதப்பதைக் கண்டு மாலைதீவு பிரஜை ஒருவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த இலங்கை இளைஞன் நீரில் மூழ்கியதால் மரணம் ஏற்பட்டதாக மாலைதீவு அரசாங்கமும் நீர்கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியும் உறுதிப்படுத்தினர்.

அவர் மாலைதீவில் சுமார் 3 ஆண்டுகள் பணி புரிந்து, 3 மாதங்களுக்கு முன்பு நாட்டுக்கு வந்து மீண்டும் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கண்டி மாவட்ட பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

கொழும்பு, ஏப்.

தலதா மாளிகையில் இடம்பெறவுள்ள புனித தந்ததாது கண்காட்சியை முன்னிட்டு கண்டி கல்வி வலயத்தில், தெரிவுசெய்யப்பட்ட 37 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது. இதற்கமைய, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை குறித்த பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளதாக மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. தலதாமாளிகையில் எதிர் வரும் 18ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள புனித தந்த தாது கண் காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெலிக்கடை சிறைக்கைதிகள் தயாரித்த இலங்கையின் மிகப் பெரிய பால் சோறு!



கொழும்பு, ஏப். 17

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நேற்று முன்தினம் இலங்கையின் மிகப்பெரிய பால் சோறு தயாரித்தனர்.

சிறைச்சாலை சமையலறையில் பணிபுரியும் 50 கைதிகளின் உதவியுடன், 400 கிலோ கிராம் பச்சை அரிசி மற்றும் 705 தேங்காய்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய புத்தாண்டு உணவு தயாரிக்கப்பட்டது. அதனுடன், 60 கிலோ வெங்காயம், 12 கிலோ காய்ந்த மிளகாய், 7 கிலோ பச்சை மிளகாய், தலா 10 கிலோ தக்காளி மற்றும் தேசிக்காய், 30 கிலோ திரவ உப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி பாற் சோறு தயாரிக்கப்பட்டது.

வெலிக்கடையில் உள்ள கிட்டத்தட்ட 3,300 ஆண் மற்றும் பெண் கைதிகள் இந்த பண்டிகை உணவைப் பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொருவருக்கும் 225 கிராம் பால் சோறு வழங்கப்பட்டது.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஆணையர் காமினி பி. திசாநாயக்கவின் கூற்றுப்படி, நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள சுமார் 30,000 கைதிகளுக்கு பால் சோறு தயாரிக்கப்பட்டது. இது சிறைகளுக்குப் பின்னால் ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தின் அரிய தருணத்தைக் குறிக்கிறது.

பால் சோறு தயாரிப்பதைத் தவிர, நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் புத்தாண்டு [illegible] (அ)

வேட்புமனு குறித்து இரு வேறு தீர்ப்புக்கள்

# உயர்நீதிமன்றை நாடி தீர்வை பெற்றுத் தருக!

## சட்டமா அதிபரிடம் சுமந்திரன் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஏப். 18

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களில் பிறப்புச்சான்றிதழ் அத்தாட்சிப் படுத்தல் மற்றும் சத்தியக் கடதாசி குறைபாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய வகையில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் இரு வேறு தீர்ப்பை வழங்கியிருக்கும் நிலையில், இது சமச்சீரற்ற தேர்தலொன்று நடைபெறுவதற்கான வாய்ப்பைத் தோற்றுவித்திருக்கிறது.

எனவே இது குறித்து சட்டமா அதிபர் உடனடியாக உயர்நீதிமன்றத்தைநாடி உரிய தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எமது கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் மாந்தை மேற்கு பிரதேச சபையிலே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு மாத்திரம் ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதற்கு எதிராக நாம் உயர் நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்றை தாக்கல் செய் திருந்தோம்.

அவ்வாறு மேலும் பலர் எழுத்தாணை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் கள்.

இருப்பினும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிரானதாக இருந்தால் அதற்குரிய எழுத்தாணை மனு உயர்நீதிமன்றத்திலும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு எதிரானதாக இருந்தால் அதற்குரிய எழுத்தாணை மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் மனுதாரர்கள் இரண்டு நீதிமன்றங்களுக்கும் சென்று நிவாரணங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் இம்முறை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் ஒரு பூர்வாங்க ஆட்சேபனை எழுப்பப் பட்டபோது,

இம்மனுக்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தீர்மானம் தொடர்பானது என்பதால் அது குறித்து ஆராய்வதற்கான நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கே இருப்பதாகக் கூறி உயர்நீதிமன்றம் அவ்வழக்குகளை நிராகரித்தது.

அவ்வாறு நிராகரித்தவுடனேயே நாங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சென்று எமக்கான நிவாரணத்தைப் பெற்றுவிட்டோம். அதன்படி நாம் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கும் போட்டியி டுகின்றோம்.

அதேவேளை மேலும் சிலர் உயர்நீதிமன்றத்திலோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் திலோ எழுத்தாணை மனுக்களைத் தாக்கல் செய்யாமல், உயர்நீதிமன்றத்தில் அடிப் படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறார் கள்.

அடிப்படை உரிமை தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் உயர்நீதிமன்றம், அவ்வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

அதன்படி பிறப்புச் சான்றிதழ் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்படாதவர்கள், சத்தியக் கடதாசியில் குறைபாடு உடையவர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை சரியானதே என உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இருப்பினும் இதே காரணத்துக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், இக்காரணங்களுக்காக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தவறு எனவும்,

அவ்வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இவ்விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருக் கும் தீர்ப்புக்கும் இடையே நேரடி முரண்பாடு காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு சட்டமா அதிபருக்கு இருக்கின்றது. அவர் தான் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்காகவும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்காகவும் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

ஆகவே சட்டமா அதிபர் இதனை உடனடியாக உயர்நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று சீரமைக்க வேண்டும். ஏனெனில் தற்போது சமச்சீரற்றதொரு முறையிலேயே தேர்தல் நடை பெறக்கூடிய நிலை காணப்படுகின்றது.

ஆகையினால் இக்குழப்பத்துக்கு சட்டமா அதிபர் விரைந்து தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அமெ. வரிக் கொள்கையினால் பலர் வேலை இழக்கும் அபாயம்!

## எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஏப். 17

**அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையால் இந்த நாட்டில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் வேலை இழக்கும் அபாயம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட விக்கிரமசிங்க, இதை அவசர நிலையாகக் கருத வேண்டும் என்றும், புதிய அமெரிக்க வரிக் கொள்கை தொடர்பாக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கட்டணங்கள் அதிகரிக்கும் போது, பொருட்களுக்கான நுகர்வோர் தேவை குறைகிறது.

இது ஒரு அனுமான சூழ்நிலை அல்ல. இது ஏற்கனவே வெளிப்பட்டு வருகிறது. இதன் ஒரு நேரடி விளைவு வேலை இழப்புக்கள் ஆகும்.

இதன் தாக்கம் வேலை செய்பவர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், பரந்த பொருளாதாரம் முழுவதும் எதிரொலிக்கும்.

ஏற்றுமதி வருவாயில் ஏற்படும் வீழ்ச்சி இலங்கையின் பொருளாதார சமநிலையை மிகவும் மோசமாக்கும். மேலும், ரூபாயின் மதிப்பு இன்னும் அதிகமாகக் குறையக்கூடும்

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அமெரிக்காவுடன் இலங்கை அரசாங்கம் விவாதிக்க வேண்டும்.

மேலும், இதை அவசரநிலையாகக் கருதி அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கும் என்பது குறித்து நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இல்லையெனில், இந்த நிலைமை குறித்து எந்த அறிக்கைகளும் வெளியிடப்படா விட்டால், ஒன்றன்பின் ஒன்றாக பிரச்னைகள் எழும்-என்றார். (அ)

# கெலிப்சோ ரயில் சேவை மூலம் 2.1 மில்லியன் ரூபா வருமானம்!

கொழும்பு, ஏப். 17

நானுஓயாவிலிருந்து எல்ல வரையில் பயணிக்கும், சுற்றுலாப் பயணிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட, கெலிப்சோ ரயில் சேவையினூடாக 2.1 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாகத் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் கொழும்பை வந்தடைவதற்காக நாளை முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் எனத் ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இதேவேளை, தலதா மாளிகை யாத்திரையை முன்னிட்டு நாளை முதல் கொழும்பிலிருந்து கண்டிக்குத் தினமும் 8 ரயில் சேவைகள் முன்னெடுக்கப் படும் எனவும் அவர் குறிப் பிட்டார். (அ)

# 2 நாட்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 800 சாரதிகள் மீது வழக்கு!

கொழும்பு, ஏப். 17

கடந்த 2 நாட்களில் மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் 800 பேர் மீது வழக்குப் பதிவு செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம், 14 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது இவர்கள் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார். (அ)

# 153 வயதான ஆமைக்கு புத்தாண்டு எண்ணெய் தடவும் சடங்கு!



கொழும்பு, ஏப். 17

புத்தாண்டு சடங்குகளின் ஒரு பகுதியாக தலையில் எண்ணெய் தடவும் சடங்கு நேற்று தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலையில் நடைபெற்றது.

அதன்படி, அதிர்ஷ்டத்துக்காக தலையில் எண்ணெய் தடவும் சடங்கு மிருகக்காட்சிச் சாலையில் வசிக்கும் யானையுடன் ஆரம்பமானது.

இதன்போது, இலங்கையில் வாழும் மிகவும் வயதான விலங்கான 153 வயதான இராட்சத ஆமையின் தலையில் எண்ணெய் பூசப்பட்டது.

அத்துடன், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையால் பெறப்பட்ட பழுப்பு நிற கரடியின் தலையிலும் எண்ணெய் பூசப்பட்டது.

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில், துணை இயக்குநர் உள்ளிட்ட மிருகக்காட்சி சாலையின் நிர்வாகத்தினரால் இது ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டி ருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

# விபத்தில் வயோதிபர் பலி!

கொழும்பு, ஏப். 17

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வல்கம - கொட்டாவை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்து அருகிலிருந்த மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் அத்துருகிரிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அத்துருகிரிய, கொட்டாவை வீதியைச் சேர்ந்த 63 வயதுடைய வயோதிபர் ஒருவர் என பொலிஸார் கூறினர். (அ)

# நுரைச்சோலை மின்பிறப்பாக்கி ஒன்றை செயலிழக்கச் செய்வதற்கு நடவடிக்கை

கொழுபு, ஏப். 17

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் மின்பிறப்பாக்கி ஒன்றைச் செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 11 ஆம் திகதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

நாப்தாவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகளும் ஏப்ரல் 12 ஆம் திகதி காலை நிறுத்தப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் எந்த மின் உற்பத்தி நிலையங்களும் தற்போது செயல்பாட்டில் இல்லை என்றும், நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் மின்சார விநியோகத்துக்கும் தேவைக்கும் இடையிலான சமநிலையை நிர்வகிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இலங்கை மின்சார சபை விளக்கமளித்துள்ளது.

புத்தாண்டு விடுமுறைக் காலத்தில் மின்சாரத்துக்கான தேவை மற்றும் செயல்பாட்டில் உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விநியோகங்கள் குறித்து விரிவான ஆய்வுக்குப் பிறகு, ஏப்ரல் விடுமுறை நாட்களில் மின்சார விநியோகத்தை நிர்வகிக்க இலங்கை மின்சார சபை தீர்மானித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தியும் நுகர்வும் எல்லா நேரங்களிலும் சமமாக இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டிய மின்சார சபை, மின் பயன்பாடு அதிகமாக இல்லாத சந்தர்ப்பங்களில், மின்சார உற்பத்தியையும் குறைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் தேசிய விடுமுறை நாட்களிலும் கூட மின்சாரத் தேவை குறைவதால், அந்த நாட்களிலும் மின்சார விநியோகம் குறைக்கப்படவேண்டும் என்றும் மின்சார சபை வெளியிட்டுள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பானம பகுதி கடலில் மூழ்கி இரு இளைஞர்கள் மாயம்!

கொழும்பு, ஏப். 17

பானம பகுதி கடலில் நீந்திக் கொண்டிருந்த 2 இளைஞர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்ததாக பானம பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமற்போன இளைஞர்கள் 23 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் மத்திய பானம பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

பானம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஹிக்கடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிக்கடுவ துறைமுகத்திற்கு அருகில் உள்ள கடற்பரப்பில் அடித்துச் செல்லப்பட்ட வெளிநாட்டு தம்பதியினர் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட ரஷ்ய தம்பதியினரில் ஆணுக்கு 47 வயது எனவும் பெண்ணுக்கு 46 வயது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தந்தை, மகன் படுகொலை சகோதரர்கள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 17

அநுராதபுரம் - இராஜாங்கனை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தந்தை மற்றும் மகன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்ட சம்பவம் தொடர்பில் சகோதரர்கள் இருவர் இராஜாங்கனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொலைச் சம்பவம் கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இராஜாங்கனை பிரதேசத் தைச் சேர்ந்த 56 வயதுடைய தந் தையும் 26 வயதுடைய மகனுமே கொலை செய்யப் பட்டுள்ள னர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 27 மற்றும் 23 வயதுடைய இரண்டு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட தந்தையும் மகனும் பல ஆண்டுகளுக்கு முன்னர் சந்தேக நபர்களின் தந்தையை தாக்கிக் கொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்புள்ளை விவசாய களஞ்சியம் இன்னும் ஏன் செயல்படவில்லை?

கேள்வி எழுப்புகிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஏ

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது திறக்கப்பட்ட தம்புள்ளை விவசாய களஞ்சியம், வெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடியது, ஆனால் இன்னும் ஏன் செயல்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.**



அங்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர், தற்போதைய அரசாங்கம் சம்பந்தப்பட்ட விவசாய சேமிப்பு களஞ்சிய வளாகம் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறிப் பொதுமக்களை ஏமாற்றியுள்ளது என்று தெரிவித்தார்.

வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்த 5,000 மெற்றிக் தொன் கொள்ளளவுடன் கட்டப்பட்ட தம்புள்ளை விவசாய சேமிப்பு வளாகத்தின் கட்டுமானம், 2019 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது, அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவால் ஆரம்பிக்கப்பட்டது

இருப்பினும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையின்போது, இந்த வளாகம் 5 ஆம் திகதி ஒன்லைனில் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலர்ந்த மஞ்சள் பொதிகளை கடத்த முயன்ற 6 பேர் கைது!

கொழும்பு, ஏப். 17

சட்டவிரோதமாக உலர்ந்த மஞ்சள் பொதிகளை இலங்கைக்குள் கொண்டு வர முயன்ற 6 சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக 145 கிலோ உலர்ந்த மஞ்சளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

உடப்பு, கருகப்பனை கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு சோதனையின்போது சந்தேக நபர்கள் கடந்த 13 ஆம் திகதி கைதாகினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22 முதல் 55 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், அவர்கள் பங்கதெனிய, வைக்கால மற்றும் கல்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் உலர்ந்த மஞ்சள் தொகையுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அமெரிக்க பிரஜை கைது!

கொழும்பு, ஏப். 17

குஷ் போதைப்பொருளை கடத்த முயன்ற அமெரிக்கப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அவர் 23 கிலோ கிராம் குஷ் போதைப்பொருளை கடத்த முயன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் வைத்திருந்த 23 கிலோ கிராம் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த போதைப்பொருளின் பெறுமதி சுமார் 230 மில்லியன் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது, சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் பொலிஸ்!

கொழும்பு, ஏப். 17

சாரதிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிர அவதானம் செலுத்தி வருவதாக தெரிவித்தனர்.

அதற்கமைய, மது அருந்தி விட்டு வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

போதைப்பொருள் பயன்படுத்தும் சாரதிகளை அடையாளம் காண நாடு முழுவதும் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை போக்குவரத்து விதிகளை மீறும் மற்றும் அதிக வேகத்தில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கண்காணிப்பதற்கு பொலிஸ் போக்குவரத்து பிரிவு விசேட நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது. (அ)

# தென்கொரியாவில் 5 நாள்கள் நடந்த உலக அமைதி மாநாட்டில் மைத்திரி!

கொழும்பு, ஏப். 17

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 10 ஆம் திகதி முதல் திங்கட்கிழமை வரை தென் கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்ற உலக அமைதி மாநாட்டில் கலந்துகொண்டார்.




உலக அமைதி மாநாட்டின் சர்வதேச அமைதி மாநாட்டு கவுன்சிலின் ஆசிய பசுபிக் பிராந்தியத் தலைவராக பதவி வகிக்கும் மைத்திரிபால சிறிசேன இம் மாநாட்டின் ஆரம்ப அமர்வில் சிறப்பு சொற்பொழிவொன்றை ஆற்றினார்.

இதன்போது உலகளாவிய அரசியல் ஸ்திரத்தன்மை, அமைதி, காலநிலை மாற்றம், மதம் மற்றும் அரசியல் துறைகளை இணைக்கும் உலகளாவிய அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அரச தலைவர்கள், பேச்சாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள், அறிஞர்கள் மற்றும் நிபுணர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும். (அ)

# கடந்த 14 நாட்களில் மட்டும் விபத்துக்களால் 37 பேர் பலி!

கொழும்பு, ஏப். 17

இந்த மாதத்தின் கடந்த 14 நாட்களில் வீதி விபத்துக்களால் 37 பேர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்துக்களில் 99 பேர் படுகாயமடைந்ததாகவும், 335 பேர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், நேற்று மற்றும் நேற்று முன்தினம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 7 பேர் பலியாகினர். எல்பிட்டிய, எதிமலே, பிட்டிகல, மிஹிந்தலை, குருநாகல் மற்றும் அஹங்கம ஆகிய பகுதிகளில் குறித்த விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, புதுவருட காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்த 412 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்தியர் இந்திக ஜாகொட தெரிவித்தார். குறித்த காலப்பகுதியில் பட்டாசு விபத்துக்களால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கம்பஹாவில் துப்பாக்கி சூடு!

கொழும்பு, ஏப். 17

கம்பஹா நகரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு நேற்று முன் தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த 2 நபர்கள், சிறிய லொறி ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் லொறியில் பயணித்தவர்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச்சூட்டில் லொறிக்கு மட்டுமே சேதம் ஏற்பட்டுள்ள தாகவும், துப்பாக்கிச் சூட்டுக் கான காரணம் இன்னும் கண்ட றியப்பட வில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அதிவேக நெடுஞ்சாலை விசேட போக்குவரத்து திட்டத்தை இன்று முதல் செயல்படுத்த திட்டம்!

கொழும்பு, ஏப். 17

புத்தாண்டுக்காக தங்களது சொந்த ஊர்களுக்குச் சென்ற மக்கள் கொழும்பு மற்றும் பிற நகரங்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக இன்று முதல் அதிவேக நெடுஞ்சாலைக்கான விசேட போக்குவரத்து திட்டத்தைச் செயல்படுத்தத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ள இந்த திட்டத்துக்காக சுமார் 800 மேலதிக பஸ்களை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், புத்தாண்டு காலத்தில் பிரயாணங்களை மேற்கொள்ளும் பயணிகளின் வசதி கருதி நேற்றைய தினமும் விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 300 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம செயற்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், மேலதிகமாக 20 ரயில் சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# உள்ளூராட்சி சபை தேர்தல் 168 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஏப். 17

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக இதுவரை குற்றவியல் முறைப்பாடு மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 168 முறைப்பாடுகள் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

36 குற்றவியல் முறைப்பாடுகளும், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 132 முறைப்பாடும் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மார்ச் 3 ஆம் திகதி முதல் உள்ளாட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் [illegible] குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் 79 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் 18 வேட்பாளர்கள் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. முறைப்பாட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 14 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பிக்கு மாத்திரம் சேவையாற்ற ஜனாதிபதி நியமிக்கப்படவில்லை!

## அநுரகுமாரவின் கருத்து தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் அதிருப்தி

பொத்துவில், ஏப். 17

**“இனம், மதம், சாதி, கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஜனாதிபதி நியமிக்கப்படுகின்றார். அவ்வாறு இல்லாது ஜே.வி.பிக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படவில்லை” - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஜனாதிபதியானவர் கட்சி, சாதி, இனம், மதம் பாராமல் அனைவருக்கும் சமமான சேவையை வழங்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை கைப்பற்றும் கட்சிகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தே குறித்த சபைகளுக்கு நிதி வழங்குவோம் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கருத்து வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி அவ்வாறு கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வழங்கப்படும் சேவைக்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வேன். ஜனாதிபதி அநுர குமார தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிக்கிறேன். இவ்வாறான கீழ்த்தரமான அரசியல் அச்சுறுத்தல்களை கண்டு யாரும் கவலை கொள்ள வேண்டாம் எனவும் சஜித் கூறினார்.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் - அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக முன்நின்ற இளைஞருக்கு எதிராகவும் இந்த அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தியுள்ளது.

சமீபத்தில், நமது நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பலஸ்தீன மக்கள் குறித்து அவர் கருதிய கருத்தை ஸ்டிக்கர் ஒட்டி வெளிப்படுத்தியிருந்தார். அவ்விளைஞர் பலஸ்தீன மக்கள் சார்பாக தனது கருத்துக்களை முன்வைத்த போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை பிரயோகித்து கைது செய்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கூட பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக முன்நின்றார். ஆதரவான நிலைப்பாடுகளை எடுத்தார். பலஸ்தீன மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்ட சமயங்களில், பாரிய படுகொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில், அப்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அநுர குமார திஸநாயக்க குரல் எழுப்பினார். இன்று பலஸ்தீன மக்கள் சார்பாக நமது நாட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குரல் எழுப்பிய சமயத்தில் தற்போதைய ஜனாதிபதி, அவருக்கு எதிரான தடுப்புக் காவலில் வைக்கும் பத்திரத்தில் கையொப்பமிடும் அளவுக்கு கீழ்த்தரமாக நடந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் இரட்டைக் கொள்கைகளும் இரட்டை நாடகங்களும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி பலஸ்தீன மக்களுக்காக நின்றது. இஸ்ரேலிய அரசும் பலஸ்தீன அரசும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

ஜே.வி.பி அரசாங்கத்துக்கு பொய் சொல்லவும் ஏமாற்றவும் மட்டுமே தெரியும். அன்று தேர்தல் மேடையில் சொன்னதை இன்று செய்ய முடியாது புலம்பிக்கொண்டிருக்கின்றனர். இன்று மக்களுக்கு வறுமையும், அசௌகரியமும் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் வறுமையை ஒழிக்கும் வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். இதற்கான வலுவான முறையான வேலைத்திட்டமொன்று அவசியம் முன்னெடுக்க வேண்டும்”- என்றார். (எ)



# புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் பட்ட திருவிழா

மட்டக்களப்பு, ஏப். 17

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டத் திருவிழா கல்லடி கடற்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் நா. தனஞ்ஜெயன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கினார்.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற களுதாவளையைச் சேர்ந்த கலாரூபன் குழுவினர் 100,000 ரூபாயையும், இரண்டாம் இடத்தைப்பெற்ற கலாசார பண்பாட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த எஸ். ரூபேசன் மற்றும் அவரது குழுவினர் 50,000 ரூபாயையும்,

மூன்றாம் இடத்தைப்பெற்ற ஆரையம்பதியைச் சேர்ந்த எஸ். குலேந்திரன் மற்றும் ரகு குழுவினர் 25,000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டனர். (எ)

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரை புத்தாண்டு நிகழ்வு திருமலையில்



திருகோணமலை, ஏப். 17

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரை புத்தாண்டு நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலை, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நம்பிக்கை நிறுவனத்தில் நடைபெற்றது.

இதன்போது அந்த நிறுவ னத்தின் செயலாளர் ச. இலட் சுமணன், உறுப்பினர் த. ரொஹான், பட்டினமும் சூழ லும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தி யோகத்தர் செ. கௌரிசாந், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. புரபானந்தன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ)



# சிகை அலங்கார நிலைய கதிரையில் சடலம் மீட்பு!

## சம்மாந்துறையில் சம்பவம்

சம்மாந்துறை, ஏப். 17

3 நாட்களுக்கு முன் இறந்த நிலையில் கதிரை ஒன்றில் அமர்ந்த நிலையில் சடலம் ஒன்றை சம்மாந்துறை பொலிஸார் மீட்டனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளினையடி சந்தி பகுதி யில் உள்ள சிகை அலங்கார நிலையத்தில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய நேற்று முன்தினம் மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டது.

50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது. உயிரிழந்தவர் வாடகை கடையில் சிகை அலங்கார நிலையத்தை நடத்தி வந்தவர் என்பதுடன் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

கொலையா? அல்லது தற்கொலையா? இயற்கை மரணமா? என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சிகை அலங்கார நிலையத்தில் சடலம் உள்ள சம்பவத்தை அறிந்து அப்பகுதியில் பெருமளவான மக்கள் கூடினர். (எ- 01)

# தேசிய காங்கிரஸ் கட்சியின் தடயத்தை அழிக்க முடியாது

## அதாவுல்லா சொல்கிறார்

அக்கரைப்பற்று, ஏப். 17

“கிழக்கு மாகாணத்தில் எந்த ஊருக்கு சென்றாலும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தடயத்தை தவிர வேறு யாருடைய தடயத்தையும் எங்கும் காண முடியாது”- என்று முன்னாள் அமைச்சர் ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டு தோற்கடிக்க முடியாது என்பதால் எமது வேட்புமனு பத்திரத்தை நிராகரிப்பதன் மூலம் தங்களுக்கு ஒரு நிவாரணத்தை பெற்றுக் கொள்வது போன்று நீண்ட காலமாக அரசியல் செய்பவர்கள் பல எத்தனங்களை நாடு முழுவதிலும் மேற்கொண்டு வந்ததை நாங்கள் பார்க்கின்றோம் எனவும் அந்தக் கட்சியின் தலைவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை முன்னிட்டு விசேட ஊடகச் சந்திப்பும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும் [illegible] ஆம் திகதி மாலை அக்கரைப்பற்றில் உள்ள கிழக்கு வாசலில் நடைபெற்ற போது



அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“உள்ளூராட்சித் தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் தேசிய காங்கிரஸ் உத்தியோகபூர்வமாக களம் நுழைகிறது. தேசிய காங்கிரஸ் என்பது இந்த நாட்டில் உள்ள தேசிய கட்சிகளில் ஒன்றாகும். குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை மாத்திரம் அல்லாது இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் உரிமை குரலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற கட்சியாக இருக்கின்றது.

மேலும் அரசியல், பொருளாதாரம், மக்களுடைய காணிப் பிரச்னை அல்லது கொரோனா தொடர்பான பிரச்னைகள், உரிமைப் பிரச்னைகள் எழுகின்ற பொழுது கடந்த கால வரலாற்றில் முறையான தீர்மானங்களை மக்கள் சார்பாக எடுத்திருந்த கட்சி தேசிய காங்கிரஸ் என்பதை யாரும் மறந்து விட முடியாது. அதே போன்று நாடு முழுவதும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் எந்த ஊருக்கு சென்றாலும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தடயத்தை தவிர வேறு யாருடைய தடயத்தையும் எங்கும் காண முடியாது. தலைவர் அஷ்ரப் கடந்த காலங்களில் தேர்தல் அரசியல் செய்த காலகட்டத்தில் அவர் விட்ட தடயத்துக்கு பின்னர் கிழக்கு மாகாண முழுவதும் எந்த ஊருக்கு போனாலும் எமது காங்கிரஸின் தடயங்கள் தான் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்”- என்றார். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் மருத்துவமனைமீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்

காஸா, ஏப். 17

**காஸாவில் உள்ள மருத்துவமனை மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில், 10 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் மருத்துவமனை சேதமடைந்தது.**

இஸ்ரேல் - காஸா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நேற்று அதிகாலை முவாசி நகரில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஒரு மருத்துவமனை சேதமடைந்தது. இதில், மருத்துவர்கள் உட்பட 10 பேர் படுகாயம் அடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# சிறைச்சாலைமீது குண்டுவீச்சு பிரான்ஸில் பரபரப்பு சம்பவம்

பாரிஸ், ஏப். 17

பிரான்ஸில் டூலோன் நகரில் உள்ள சிறைச்சாலை மீது வெடிகுண்டு வீசப்பட்டது.

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக பிரான்ஸ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்குப் பதிலடியாக தலைநகர் பாரிஸ் உட்பட பல்வேறு இடங்களில் உள்ள சிறைச்சாலைகள் மீது போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் தாக்குதல் நடத்தின.

இரவு நேரத்தில் சிறைச்சாலையின் வாகன நிறுத்துமிடங்களில் நின்ற கார்களை அவர்கள் தீ வைத்து கொளுத்தினர். மேலும், டூலோன் நகரில் உள்ள சிறைச்சாலை மீது நேற்று முன்தினம் வெடிகுண்டு வீசப்பட்டது.

இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஜெரால்ட் டார்மான் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)




# மிக பலவீனமான நிலையில் ரஷ்ய படையினர் உள்ளனர்!

## உக்ரைனில் கைதான சீன பிரஜைகள் தெரிவிப்பு

கீவ், ஏப். 17

ரஷ்யா தெரிவிப்பதை விட ரஷ்ய படையினர் மிக பலவீனமான நிலையில் உள்ளனர் என்று உக்ரைன் படையினரால் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாத ஆரம்பத்தில் கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவுக்காக போரிட்டுக்கொண்டிருந்த வாங் குவான்ஜங் மற்றும் ஜாங் ரென்போ ஆகியோர் பிடிபட்டனர். இந்த இருவரும் உக்ரைன் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இராணுவச் சீருடையுடன் கைகள் கட்டப்பட்ட நிலையில் இவர்கள் இருவரும் உக்ரைனின் தேசிய செய்தி முகவர் அமைப்பு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தனர்.

"ரஷ்யர்கள் தெரிவிப்பது அனைத்தும் பொய், அவர்கள் போலியானவர்கள். ரஷ்யா தெரிவிப்பது போல உண்மையில் அது வலுவான நிலையில் இல்லை. அவர்கள் சொல்வது போல உக்ரைன் மோசமான நிலையில் இல்லை.

நாங்கள் சீனா சார்பில் போரிடவில்லை சீன அரசாங்கத்துக்கும் எங்களுக்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை.

இணைய விளம்பரங்கள் மூலம் எங்களை கூலிப்படையாக சேர்த்துக்கொண்டனர்"- என்று கூறினர்.

நான் ரிக்ரொக் விளம்பரம் ஊடாக தெரிவு செய்யப்பட்டேன் எனத் தெரிவித்த வாங், நாங்கள் வாகனங்கள் மூலம் தென்மேற்கு ரஷ்யாவின் கசானுக்கு கொண்டு செல்லப்பட்டோம். அதன் பின்னர் கிழக்கு உக்ரைனின் டொனெட்ஸ்க் பிராந்தியத்துக்கு சென்றோம். அங்கு என்னை இராணுவத்தில் இணைத்தார்கள் என தெரிவித்துள்ளார்.

நான் ரஷ்யாவில் சுற்றுலாப் பயணியா கயிருந்தவேளை விளம்பரமொன்றை பார்த்தேன். இரண்டு மில்லியன் சம்பளம் என தெரிவித்தார்கள். இதனால், நான் ரஷ்ய இராணுவத்தில் இணைய தீர்மானித்தேன் என ஜாங் ரென்போ தெரிவித்தார்.

# ஆப்கானில் நிலநடுக்கம்

காபுல், ஏப். 17

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலை 04. 43 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நாட்டின் இந்துகுஷ் மாகாணம் பஹ்லன் நகரிலிருந்து 164 கிலோ மீற்றர் தொலைவில் 75 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 5.9 ஆக பதிவான நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் இந்தியாவிலும் உணரப்பட்டது. தலைநகர் புதுடில்லி உட்பட வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் நில அதிர்வு ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அமெரிக்காவின் 'போயிங்' விமானங்களுக்கு சீனா தடை

பீஜிங், ஏப். 17

அமெரிக்காவின் போயிங் விமானங்களுக்கு சீனா தடை விதித்துள்ளது. இதனால், அமெரிக்கா - சீனா இடையே வர்த்தகப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தமது நாட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக உலக நாடுகளுக்கு பரஸ்பர வரியை விதித்தார். குறிப்பாக இலங்கைக்கு 44 சதவீதமும் இந்தியாவுக்கு 27 சதவீதமும் சீனாவுக்கு 104 சதவீதமும் வரி விதித்து அதிரடி காட்டினார்.

இந்த நிலையில், சீனா தவிர மற்ற நாடுகளுக்கு வரிவிதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிட்டார். இதற்குப் பதிலடியாக அமெரிக்காவுக்கு 125 சதவீதம் பரஸ்பர வரியை சீனா விதித்தது. இதற்குப் போட்டியாக 145 சதவீதம் வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டார். இத்தகைய சூழலில் இரு நாடுகளிடையே வர்த்தகப் போர் மூளும் அபாயம் நிலவுகிறது.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்க நாட்டின் விமான தயாரிப்பு நிறுவனமான "போயிங்" கிடம் இருந்து விமானங்கள் வாங்க தமது விமான நிறுவனங்களுக்கு சீன அரசாங்கம் தடை விதித்துள்ளது. மேலும், விமானம் தொடர்பான எந்த கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீன அரசு உத்தரவிட்டுள்ளது. (எ)

# கிராமத்துக்குள் நுழைந்து துப்பாக்கி சூடு; 51 பேர் பலி

## நைஜீரியாவில் தொடரும் சோகம்

அபுஜா, ஏப். 17

நைஜீரியாவில் பாஸ்சா பகுதியில் விவசாயிகளை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் 51 பேர் உயிரிழந்தனர். அவர்களின் வீடுகள் அழிக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவின் வடமேற்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் இரு குழுக்கள் இடையே நீண்ட காலமாக மோதல் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கிராமத்துக்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

விவசாய சமூகத்தினர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொண்டவர்கள் மேய்ப்பர்கள் என நம்பப்படும் சமூகத்தை சேர்ந்த ஆயுதமேந்தியவர்கள் என்று கூறப்படுகிறது.

அப்பகுதியில் உள்ள பாதுகாப்பு குறைபாடுகளை பயன்படுத்தி இவர்கள் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பில் நைஜீரிய ஜனாதிபதி போலா டினுபு தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையாக விசாரித்து, வன்முறைச் செயல்களைத் திட்டமிட்டதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காணுமாறு பாதுகாப்பு தரப்பினர்களுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்- என்றார். (எ)

# ஈராக்கில் மணல் புயல்: 4 ஆயிரம் பேர் பாதிப்பு!

பாக்தாத், ஏப். 17

ஈராக்கின் பல நகரங்களில் வீசிய மணல் புயல் காரணமாக 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மூச்சு திணறலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக் முழுவதும் வீசிய மணல் புயலையடுத்து ஏற்பட்ட மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதனால் பாஸ்ரா மற்றும் நஜாப் ஆகிய விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து - லொறி மோதி பாகிஸ்தானில் விபத்து

## 10 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், ஏப். 17

பாகிஸ்தானில் பேருந்து - லொறி மோதிய கோர விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாண நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் மாலை ஒரு லொறி சென்று கொண்டிருந்தது. வடக்கு வசிரிஸ்தான் என்ற இடத்துக்கு அருகே சென்றபோது அந்த லொறி கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் நிலைதடுமாறி எதிரே வந்த பேருந்து மீது மோதியது. இதில், அந்த பேருந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். படுகாயமடைந்த 8 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# கொல்கத்தாவை வீழ்த்தி பஞ்சாப் அசத்தல் வெற்றி

முல்லன்பூர், ஏப். 17

16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தி பஞ்சாப் அணி அசத்தல் வெற்றி பெற்றது.

18ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை 30 லீக் ஆட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன. இந்த நிலையில், முல்லன்பூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 31ஆவது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில், நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது. தொடக்க வீரர்களாக ப்ரப்சிம்ரன் சிங் மற்றும் பிரியன்ஷ் ஆர்யா களமிறங்கினர். இதில் பிரியன்ஷ் ஆர்யா 22, ப்ரப்சிம்ரன் சிங் 30 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து களம் புகுந்த ஸ்ரேயஸ் ஐயர் ஓட்டம் ஏதும் எடுக்காமலும், ஜோஷ் இங்கிலிஸ் 2 ஓட்டங்களிலும், நேஹல் வதேரா 10, மக்ஸ்வெல் 7, சூர்யாஷ் ஷெட்ஜே 4, மார்க்கோ ஜான்சன் ஓர் ஓட்டத்திலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஷஷாங் சிங் மற்றும் பார்ட்லெட் ஜோடி சேர்ந்தனர். இதில் ஷஷாங் சிங் 18 ஓட்டங்களில் வெளியேறினார். இறுதியில் பஞ்சாப் அணி 15.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 111 ஓட்டங்கள் எடுத்தது.

கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராணா 3 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 112 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

இந்த ஆட்டத்தை கொல்கத்தா அணி எளிதில் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் கொல்கத்தா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய குவிண்டன் டி கொக் 2 ஓட்டங்களிலும்,



சுனில் நரேன் 5 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

ரஹானே - ரகுவன்ஷி ஜோடி சற்று நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இதையடுத்து சாஹல் பந்துவீச்சில் ரஹானேவின் விக்கெட் வீழ்ந்தது. இந்த ஜோடி பிரிந்த பின்னர் கொல்கத்தா அணியின் விக்கெட்கள் மளமளவென சரியத் தொடங்கின.

இதில் சாஹல் 4 விக்கெட்களை கைப்பற்றினார். மக்ஸ்வெல் பந்துவீச்சில் வெங்கடேஷ் ஐயர் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதற்கிடையில் அண்ட்ரே ரஸல் 2 சிக்ஸர்களையும், ஒரு பௌண்டரியையும் பறக்கவிட்டு கொல்கத்தா அணிக்கு சற்று நம்பிக்கை கொடுத்தார். இறுதியில் மார்க்கோ ஜான்சன் வீசிய பந்தில் ரஸல் விக்கெட்டை பறிகொடுத்தார்.

இதனால், கொல்கத்தா அணி 15.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 95 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் பஞ்சாப் கிங்ஸ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. சாஹல் அதிகபட்சமாக 4 விக்கெட்களையும், மார்க்கோ ஜான்சன் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர். (எ)



## இனி வரும் ஆட்டங்களில் நன்றாக செயல்படுவேன்

**சி. எஸ். கே. வீரர் ஷேக் ரஷீத்**

லக்னோ, ஏப். 17

"ஒரு தவறான தெரிவால் ஆட்டமிழந்து விட்டேன். இனி வரும் ஆட்டங்களில் நன்றாக செயல்படுவேன்"- இவ்வாறு சென்னை அணி வீரர் ஷேக் ரஷீத் தெரிவித்தார்.

ஐ. பி. எல். தொடரில் லக்னோவில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் சி. எஸ். கே. தரப்பில் ஷேக் ரஷீத் அறிமுக வீரராக களம் கண்டார். அவர் 19 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்தார். இந்த நிலையில், தனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் ஷேக் ரஷீத் நன்றி கூறியுள்ளார். இது தொடர்பில் சி.எஸ்.கே. நிர்வாகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில் ஷேக் ரஷீத் கூறியதாவது,

"2 ஆண்டுகளுக்கு பின்னர் எனக்கு கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்த வேண்டும் என நினைத்தேன். ஆனால், ஒரு தவறான தெரிவால் ஆட்டமிழந்து விட்டேன். அடுத்த முறை நிச்சயம் தவறைத் திருத்தி கொள்வேன். இனி வரும் ஆட்டங்களில் நன்றாக செயல்படுவேன் என நினைக்கிறேன். எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் மிக்க நன்றிகள்"- என்றார். (எ)

## 36 விக்கெட் வீழ்த்தி நரேன் புதிய சாதனை



முல்லன்பூர், ஏப். 17

ஓர் அணிக்கு எதிராக அதிக விக்கெட்கள் வீழ்த்திய உமேஷ் யாதவின் சாதனையை சுனில் நரேன் முறியடித்துள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முல்லன்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் 2 விக்கெட்கள் வீழ்த்தியதன் மூலம் சுனில் நரேன் ஐ.பி.எல். வரலாற்றில் மாபெரும் சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது, ஐ.பி.எல். தொடரில் ஒரு குறிப்பிட்ட அணிக்கு எதிராக அதிக விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை சுனில் நரேன் படைத்துள்ளார். அந்த பட்டியலில் வருமாறு,

சுனில் நரேன் - 36 விக்கெட்கள் (எதிரணி பஞ்சாப் கிங்ஸ்),

உமேஷ் யாதவ் - 35 விக்கெட்கள் (எதிரணி பஞ்சாப் கிங்ஸ்),

டுவைன் பிராவோ - 33 விக்கெட்கள் (எதிரணி மும்பை இந்தியன்ஸ்),

மொஹித் சர்மா - 33 விக்கெட்கள் (எதிரணி மும்பை இந்தியன்ஸ்),

யுஸ்வேந்திர சாஹல் - 32 விக்கெட்கள் (எதிரணி பஞ்சாப் கிங்ஸ்),

புவனேஷ்வர் குமார் - 32 விக்கெட்கள் (எதிரணி கொல்கத்தா நைட் ரைடர்ஸ்). (எ)

## பார்சிலோனா ஓபின் ரென்னிஸ் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் வெற்றி

மட்ரிட், ஏப். 17

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பார்சிலோனா ஓபின் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ளனர். கடந்த 12ஆம் தேதி தொடங்கிய இந்தத் தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் கிரீஸ் வீரர் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், அமெரிக்கா வீரர் ரெய்லி ஒபெல்காவுடன் நேற்று மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல்



சிறப்பாக விளையாடிய ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால், அவர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## "இப்போதும் உலகின் சிறந்த விக்கெட் காப்பாளர் டோனி"

லக்னோ, ஏப். 17

எம். எஸ். டோனி தான் உலகின் சிறந்த விக்கெட் காப்பாளர் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கேல் கிளார்க் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் லக்னோவில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.

இதில், 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருது எம். எஸ். டோனிக்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், இப்போதும் டோனிதான் உலகின் சிறந்த விக்கெட் காப்பாளர் எனவும், லக்னோவுக்கு எதிரான ஆட்டத்தில் டோனியின் துடுப்பாட்டத்தை விட, தலைமைத்துவம் சிறப்பாக இருந்ததாகவும் மைக்கேல் கிளார்க் கூறினார்.

டோனி களத்துக்கு வந்தாலே எப்போதும் ரசிகர்கள்



சத்தம் அதிகமாக இருக்கும். அவருடைய கீப்பிங் குறித்து எனக்கு ஆச்சரியமில்லை. இப்போதும் டோனிதான் உலகின் சிறந்த விக்கெட் காப்பாளர் என்பதை ஏற்கனவே நான் தெரிவித்துள்ளேன். இதில், நீண்ட காலமாக அவர் தொடர்ச்சியாக அசத்துவது அற்புதமானது- என்றார்.

## மோசமான சாதனையை சமன் செய்தது டில்லி

புதுடில்லி, ஏப். 17

பெங்களூரு அணியின் மோசமான சாதனையை டில்லி அணி சமன் செய்துள்ளது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் டில்லி அருண்ஜெட்லி மைதானத்தில் நடந்த 29ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிடல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் மும்பை அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அருண்ஜெட்லி மைதானத்தில் டில்லி அணி சந்தித்த 45ஆவது தோல்வி இதுவாகும். இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் குறிப்பிட்ட ஒரு மைதானத்தில் அதிக தோல்விகளைச் சந்தித்த அணி என்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் மோசமான சாதனையை டில்லி அணி சமன் செய்தது.

பெங்களூரு அணி சின்னசாமி மைதானத்தில் 45 தோல்விகளைச் சந்தித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்காலிக...

தேர்தலை முன்னிட்டு, கரைச்சி பிரதேச சபையின் உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழினப் படுகொலைக்கான நீதியை கோரிப் பெற்று, எமது அரசியல் இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள நாம், காலச்சூழலும் -களச்சூழலும் தந்திருக்கும் தற்காலிகப் பின்னடைவுகளைக் காரணம் காட்டி நிரந்தர வெற்றியை இழக்கும் நிலைக்கு வந்துவிடக்கூடாது.

அரசியல் களத்தின் உள்ளும் புறமும் எத்தனை பெரும் சவால்கள் எழுந்தாலும், இலக்கு நோக்கிய எம் பாதையும், பயணமும் அறம் சார்ந்ததாக அமையுமானால் அடைய வேண்டிய அரசியல் உரித்துகளை அடைந்தே தீருவோம்-என்றார். (அ)

## ஜே. வி. பி....

நிலை ஏற்படும்.எனினும் நாங்கள் நிர்ணயம் செய்யும் சக்தியாக இத்தேர்தலில் காணப்படுவோம்.

யாருடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற நிலை உள்ளது. குறிப்பாக தேசியத்தை நேசிக்கும் தமிழ் கட்சிகளுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் சூழலை உருவாக்குவோம்.

இனி வருகின்ற காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாதுவிட்டால் அது எமது பிரதேசங்களில் பிளவுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தும்.தேசியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையையும் ஏற்படுத்தும். எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நாங்கள் நிர்ணயம் செய்கின்ற சக்தியாக தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்குவோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர்.ஆனால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்களுக்கும் உங்களின் விஜயம் இடம் பெறவேண்டும் என அண்மையில் பாராளுமன்றத்தில் கோரிக்கையை முன் வைத்து உரை நிகழ்த்தினேன்.

ஆனால், ஜனாதிபதி ,பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் மாத்திரமே வன்னிப் பிரதேசங்களுக்கு வருகின்றனர். குறிப்பாக மன்னார் மாவட்டத்துக்கு வருகின்றனர். தேர்தலில் தமது கட்சி வெற்றியை பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற அர்த்தத்துடன் வருகிறார்கள்.

குறிப்பாக மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி பிரதான விடயமாக பார்க்கப்படுகின்றது. மன்னார் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறித்த செயல்பாடுகளை நிறுத்தக் கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தற்போது மன்னாருக்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் வருகை என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், குறித்த இரு திட்டங்களையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாக அமையும்.

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கணிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி. அரசு முழுமையாக கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தைக் காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும். மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன-என்றார். (அ)

## வரி குறித்து...

இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு அமெரிக்கா பாரியளவில் சுங்க வரி விதித்துள்ளது.

இந்த வரி விதிப்பு இலங்கையின் ஆடைக் கைத்தொழிற்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## பாவற்குள...

விநாயகபுரத்தை சேர்ந்த கோபிதாசன் (வயது 33) என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் கடந்த 14ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருந்தார் என அவரது குடும்பத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட சடலத்தில் இரத்தக்கறைகள் படிந்துள்ள நிலையில் பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பிள்ளையான்...

அண்மையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையானை அண்மையில் நேரில் சந்தித்து கலந்துரையாடிய கம்மன்பில நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இந்த விடயத்தை கூறினார்.

புலிகள் தரப்பில் இருந்தவர்களை விட்டுவிட்டு புலிகளுக்கு எதிராக போர் தொடுத்த தன்னை இவ்வாறு நீண்ட காலம் துன்புறுத்துவது குறித்து மிகுந்த கவலை கொள்வதாக பிள்ளையான் கண்ணீர் விட்டு அழுதார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்பொழுது சமூக ஊடகங்களில் செய்தி எழுதும் பல்வேறு இளம் தலைமுறைக்கு பிள்ளையான் யார் என்பது தெரியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியின் ஆரம்பமே கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியமை.

14 வயதில் பலவந்தமாக சிறுவர் போராளியாக பிள்ளையான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டவர். சிறுவர் போராளிகள் புலிகள் அமைப்பில் இருந்தனர் என்பதை பறைசாற்றக்கூடிய - உயிருடன் இருக்கும் ஓர் ஆதாரமாக பிள்ளையானை நோக்குகிறோம்.

பிள்ளையான் 2006ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை புலிகளிடமிருந்து பிளவடைந்து இராணுவத்தில் இணைந்து யுத்த வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர். மிகச் சிறந்த போர் வீரர்களாக பிள்ளையான் மற்றும் கருணாவை அடையாளப்படுத்த முடியும்.

வடக்கிலிருந்து வந்த புலிப் போராளிகளுக்கு கிழக்கின் சூழ்நிலைகள் புரியாத காரணத்தினால் அவர்கள் தோல்வியை தழுவினர். அந்த தோல்விக்கு பிரதானமான ஓர் கருவியாக பிள்ளையான் செயற்பட்டார்.

எனவே பிள்ளையான் தொடர்பில் பிழையான தகவல்களை ஊடகங்களில் பரப்புவது ஏற்புடையது அல்ல. இன்றைய தலைமுறையினர் பிள்ளையான் யார் என்பதனை புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பலர் பாராளுமன்றில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். புலம்பெயர் நாடுகளில் இன்னமும் அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறார்கள். பல்வேறு சொத்துகளை குவித்துள்ளனர். சிலர் தன்னார்வ நிறுவனங்களின் பிரதான பதவிகளை வகிக்கின்றார்கள்.

தாம், படையினருக்கே வழங்கிய ஒத்துழைப்பு உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாகவும் புலிகள் தரப்பில் இருந்தவர்களை விட்டுவிட்டு புலிகளுக்கு எதிராகப் போர் தொடுத்த தம்மை இவ்வாறு நீண்ட காலம் துன்புறுத்துவது குறித்து மிகுந்த கவலை கொள்வதாகவும் பிள்ளையான் கண்ணீர் விட்டு அழுதார் -என்றார். (அ)

## யாரை தெரிவு...

பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களை நாங்கள் கைப்பற்றுவோம். பொதுஜன பெரமுன கிராமத்துக்கு சேவையாற்றியுள்ளது. ஆகவே 2018இல் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்றதை போன்று இந்த முறையும் வெற்றி பெறுவோம்.

தேசிய மக்கள் சக்தி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் பொய் மற்றும் வெறுப்பு ஆகியவற்றை மாத்திரம் மக்கள் மத்தியில் பிரதான அரசியல் கொள்கையாக முன்வைத்தது. அரசியல் ரீதியில் தாம் ஏமாற்றமடைந்ததை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை தெரிவு செய்தால் மாத்திரமே உள்ளூாட்சி மன்ற அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறானதொரு கருத்தாகும். அரச தலைவர் என்ற வகையில் பதவிக்கு ஏற்றாற்போல் ஜனாதிபதி நடந்து கொள்ள வேண்டும்-என்றார். (அ)

## தேர்தல்...

ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை நேற்று முன்தினம் தபால் திணைக்களத்திடம் ஒப்படைந்துள்ளோம். எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் நிறைவடையும்.

தபால்மூல வாக்களிப்பு பிற்போடப்படும் சாத்தியம் காணப்படுவதாக ஒரு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை அடிப்படையற்றது. ஏற்கெனவே தீர்மானித்ததற்கமைய எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் தபால்மூல வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இந்த மூன்று தினங்களில் வாக்களிக்கதவறும் அரச உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு தினங்களில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுலகத்தில் வாக்களிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை அவதானிக்க முடிகிறது. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியுள்ளோம்-என்றார். (அ)

## முள்ளிவாய்க்...

தமிழர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் பாரம்பரியத்தின் முதலாவது பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், தமிழ்ப் புத்தாண்டு தனிப்பட்ட அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

எங்களது சமூகம் ஒரு பெருமை மிக்க சமூகம், பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் எனது முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக, இலங்கையில் போர்க் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டும் என நான் அழைப்பு விடுத்தேன்.

அன்றிலிருந்து இந்த விடயம் தொடர்பில் செயற்படுவதை நான் நிறுத்தவில்லை. கடந்த 15 வருடங்களிற்கு பின்னர் தொழில்கட்சி இது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட அட்டுழியங்களுக்கு காரணமான இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எதிராக மார்ச் மாதம் பிரிட்டன் அரசாங்கம் தடைகளை விதித்தது.

இது நீதிக்கான நீண்ட காலமாக காத்திருந்த பல குடும்பங்களுக்கு மிக முக்கியமானதொரு தருணம். ஆனால் நீதி என்பது ஒரு முறை மாத்திரம் நடக்கும் நிகழ்வல்ல, நாம் தொடர்ந்து செயற்படவேண்டும் -என்றார். (அ)

## புராதன...

விடுவிக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்-

நீண்ட காலமாக சைவ மக்கள் வழிபாடு செய்த புராதன இடங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இன்றும் விடுவிக்கப்படாமல் உள்ளன. தாங்கள் இவற்றை விடுவிப்பதில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அன்போடு ஜனாதிபதியிடம் வேண்டுகிறோம்.

மேலும் பொதுமக்களின் காணிகளில் வடக்கு கிழக்கில் படையினர் தொடர்ந்து தங்கி உள்ளனர். தாங்கள் அவ்விடயத்தில் அக்கறை கொண்டு பொதுமக்களின் நிலங்களை விடுவிக்கவேண்டும். பாடல் பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரர் திருத்தலத்துக்கு அருகாமையில் பக்தர்களுக்கு இடையூறாக கோயிலுக்குச் செல்லும் பாதையில் பெட்டிக் கடைகள் அமைக்கப்பட்டு கோயில் புனிதத்தை தொடர்ந்து கெடுத்து வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக சென்ற வருடம் நல்லை ஆதீனத்துக்கு தாங்கள் வருகை தந்தபோது எடுத்துரைத்தோம்.

தயவு செய்து வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கோணேஸ்வர திருத்தல சுற்றாடலை பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சைவ மக்கள் சார்பில் வேண்டுகிறோம். தாங்கள் பதவி ஏற்றதும் நீண்டகாலமாக உள்ள தமிழர் பிரச்னையை நிரந்தரமாக தீர்த்து வைப்பேன் என கூறி வந்துள்ளீர்கள். நிரந்தரமான பூரண உரிமைகள் உள்ளடக்கிய தீர்வை வழங்கி எம்மினத்தின் நீண்டகாலப் பிரச்னையை தீர்த்து வைக்க முன்வாருங்கள் -என்றுள்ளது. (அ)

## குற்றப்...

பொலிஸாரின் ஒழுக்கம் அதிருப்திக்குரியன என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேலும், சட்டத்தரணியாகவே பிள்ளையானை சந்தித்தேன். இந்த சந்திப்பு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கவேண்டாம் என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பதிகாரி என்னிடம் வலியுறுத்தினார்.

இந்த அரசாங்கத்தின் கீழ் பொலிஸ் சேவை அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. நான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குள் இருக்கும்போது சமூக வலைத்தளங்களில் அந்த செய்தி வெளியாகியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் உப பொலிஸ் பரிசோதகராக சேவையாற்றும் ஏ.எல்.எம்.பாயிம் தனது முகப்புத்தகத்தில் நான் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்றதையும், அது தொடர்பில் அவரது நிலைப்பாட்டையும் பதிவேற்றம் செய்துள்ளார்.

தடுப்பு காவலில் உள்ள சந்தேக நபரைச் சந்திக்க வரும் சட்டத்தரணிகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் முகப்புத்தகத்தில் பதிவிடுவதில்லை. இதுவே முதல் தடவையாகும். தெரிவு செய்யப்பட்ட சமூக வலைத்தள ஊடகவியலாளர்களுக்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் தொடர்பான விவரங்களை பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் காசுக்கு விற்பனை செய்வதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்விடயம் குறித்து உடன் விசாரணைகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மர்மமாக இறந்த நிலையில் முதியவர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஏப். 17

கண்டி - அலவத்துகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹதிரிம பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அலவத்துகொடை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அலவத்துகொடை, ஹதிரிம பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தன்று உயிரிழந்த வயோதிபருக்கும் மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின்போது வயோதிபர் திடீரென சுகயீனமுற்றுள்ள நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பொய்யுரைத்து எப்படி அரசை நடத்தமுடியும்?

### கேள்வி எழுப்புகிறார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, ஏப். 17

பொய்யுரைத்து எவ்வாறு அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினனர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தேர்தல் சட்டத்தை மீறி செயற்பட்டு வருகின்றனர். அதிலும் ஒரு அங்கமாக உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை தம்முடைய கட்சி பெறவில்லையாயின் நிதியை விடுவிக்க முடியாது என்ற கருத்தையும் ஜனாதிபதி பிரசார நடவடிக்கைகளின் போது கூறுகின்றார். அவர்களால் வெற்றியை பெற முடியாது என்பதை அறிந்திருக்கின்றமையினாலேயே அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். இது ஜனநாயக விரோத கருத்தாகும். மக்கள் விடுதலை முன்னணியினரின் உண்மை முகம் மீண்டும் வெளிவர ஆரம்பித்துள்ளது. அதுவும் அரச அதிகாரத்தை பயன்படுத்தி மக்களுக்கு அழுத்தம் கொடுக்கமுற்படுகின்றனர்.

1-12.PDF:11

இந்தியாவுடன் 7 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. இந்த உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் குறித்து அமைச்சரவைக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதில் சந்தேகம் உள்ளது. இதுவரை எந்த உடன்படிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்க்கப்படவில்லை. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் பொது செயலாளர் இந்த உடன்படிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பொய்யுரைக்கிள்ளார். இவ்வாறு பொய்யுரைத்து எவ்வாறு நாட்டை கொண்டு நடத்த முடியும்-என்றார். (அ)

# விவசாய காணிகளுக்கு கட்டுப்பாடின்றி சுதந்திரமாக சென்றுவர அனுமதியுங்கள்

### வலி. வடக்கு மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 17

**வலி. வடக்கு பிரதேசத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விடுவிக்கப்பட்ட விவசாய காணிகளுக்கு கட்டுப்பாடுகள் இன்றி சுதந்திரமாக சென்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அக்காணிகளை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

யாழ்ப்பாணத்துக்கு இன்று வியாழக்கிழமை ஜனாதிபதி விஜயம் மேற்கொள்ளும்போது, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுடன் உரையாடி அப்பகுதி விவசாயக் காணிகளை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வலி. வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஒரு பகுதி விவசாயக் காணிகளை விடுவித்து விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதி அளிக்கப்பட்டது.

அதேவேளை "உறுமய" காணி வழங்கப்படும் திட்டத்தின் ஊடாக ஒட்டகப்புலம் பகுதியில் 408 குடும்பங்களுக்கு 235 ஏக்கர் காணி பகிர்ந்தளிக் கப்பட்டது.

விவசாய நடவடிக்கைக்காக பலாலி வடக்கு, பலாலி கிழக்கு, பலாலி தெற்கு, வயாவிளான் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் காணிகள் விடுவிக்கப்பட்டன. குறித்த விவசாய காணிகளில் விவசாய நடவடிக் கைகளில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் கடுமையான நிபந்தனைகளுடன், கட்டுப்பாடுகளை விதித்தே விவசாய நிலங்களுக்கு மக்களை அனும தித்துள்ளனர்.

குறிப்பாக, முன்னிரவுவேளைகளில் பின்னர் காணிக ளுக்குள் நிற்க முடியாது. விவசாய நிலங்களில் ஒய்வு எடுப்பதற்கு தற்காலிக கொட்டகைகளை அமைக்க அனுமதியில்லை போன்ற கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

அத்துடன் குறித்த காணிகளை சுற்றி உயர் பாதுகாப்பு வலய வேலிகள் அகற்றப்படாமல் இருப்பதனால், தமது விவசாயக் காணிகளுக்கு சுற்று பாதைகள் ஊடாக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலைமைகளும் மக்களுக்குக் காணப்படுகின்றன.

குறித்த வேலிகளை பின் நகர்த்த 18 மில்லியன் ரூபாய் செலவு என இராணுவத்தினர் மதிப்பீடு செய்து, நிதி கோரியுள்ள நிலையில் அந்த நிதி இராணுவத்தினருக்கு வழங்கப்படாமையால், இராணுவத்தினர் வேலியை பின் நகர்த்த நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி, யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி, விடுவிக்கப் பட்ட விவசாய காணிகளுக்குள் சுதந்திரமாகச் சென்று விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதி வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## பெற்றோலிய பொருட்கள் ஏற்றுமதி வருவாய் உயர்வு

கொழும்பு, ஏப். 17

நாட்டின் பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதி வருவாய் வரலாற்றில் முதல் முறையாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.

கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கான எரிபொருள் விநியோக அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணம் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

செங்கடலில் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பட்ட இடையூறுகள் பெற்றோலியப் பொருட்களின் ஏற்றுமதி வருவாயையும் அதிகரிக்க வழிவகுத்தன.

கடந்த ஆண்டு, நாட்டின் ஏற்றுமதி வருவாய் 12.8 பில்லியன் டொலராக பதிவாகியுள்ளது. இது 2023 உடன் ஒப்பிடும்போது 7.02 வீத வளர்ச்சி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இணைந்தவர்கள் துரோகிகள்

### இப்படி கூறுகிறார் இளங்குமரன் எம். பி.



யாழ்ப்பாணம், ஏப். 17

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்த அனைவரும் தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டனர். இவர்கள் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்கு மரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவ லகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துச் சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும். எங்களின் வெற்றியை மக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனால், ஏனையக் கட்சிகள் கலக்கமடைந்துள்ளன. தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடிக்க தமிழ்க் கட்சிகள் தற்போது ஒன்றிணைந்துள்ளன. எமது வெற்றியை தடுத்து நிறுத்த போலிப் பிரசாரம் செய்கின்றனர்.

2001ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் எல்லா மாற்று அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்காக அழைப்பு விடுத்திருந்தனர். அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளை எதிர்ப்பதற்கு தற்துணிவின்றி ஒன்றிணைந்தனர்.

அப்போது பேரளவில் மட்டுமே அனைவரும் ஒன்றுபட்டிருந்தனர். அதன் காரணமாகவே இன்றுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படவில்லை. இவ்வாறு இணைந்த அனைவரும் தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டனர். இவர்கள் அனைவரும் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போதுவரை பேரளவில் மட்டுமே இயங்கிக்கொண்டி ருக்கின்றது. நாங்கள் பிரதேச சபைகளை கைப்பற்றும் போது அவர்களின் இருப்பு இல்லாமல் போய்விடும் - என்றார். (அ)

# தற்காலிக தோல்விகளுக்காக நாம் நிரந்தர வெற்றியை இழக்க முடியாது

### சிறீதரன் எம்.பி. கூறுகிறார்

கிளிநொச்சி, ஏப். 17

தமிழினப் படுகொலைக்கான நீதியைக் கோரிப்பெற்று, எமது அரசியல் இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள நாம், காலச்சூழலும் - களச்சூழலும் தந்திருக்கும் தற்காலிக பின்னடைவுகளை காரணம்காட்டி நிரந்தர வெற்றியை இழக்கும் நிலைக்கு வந்துவிடக்கூடாது.

அரசியற் களத்தின் உள்ளும் புறமும் எத்தனை பெரும் சவால்கள் எழுந்தாலும், இலக்கு நோக்கிய எம் பாதையும், பயணமும் அறம் சார்ந்ததாக அமையுமானால் அடைய வேண்டிய அரசியல் உரித்துகளை அடைந்தே தீருவோம் - என பாரா ளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளு மன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவரும், வேட்பாளருமான குணபாலசிங்கம் குணராஜ் தலைமையில் கட்சியின் மூத்த உறுப்பினரும், வேட்பாளருமான கணேசு துரைலிங்கம் உள்ளிட்ட உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், வேட்பாளர்களான சாலினி சாருகன், இராசதுரை ஜெயசுதர்சன், யோகேஸ்வரன் நிரோயன் மற்றும் கட்சியின் வட்டாரக்கிளை உறுப்பினர் தர்மராசா சிறீதரன் ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன், வட்டாரக்கிளை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.